


**27. 06. 2025**

தலைப்பு செய்திகள்

1. நாட்டின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு குறு சிறு நடுத்தர தொழில்நிறுவனங்களின் பங்களிப்பு மிகவும் அவசியம் என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. மக்களை பாதிக்காத வகையில் ரயில் கட்டணங்கள் படிப்படியாக உயர்த்தப்படும் என்று மத்திய ரயில்வே இணையமைச்சர் திரு.சோமண்ணா கூறியுள்ளார்.

3.தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான கலந்தாய்வு வரும் 7-ம் தேதி தொடங்கும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.

4. கர்நாடக அணைகளிலிருந்து பெருமளவு தண்ணீர் காவிரியில் திறக்கப்படுவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 57 ஆயிரம் கனஅடியாக இன்று அதிகரித்தது.

5. சென்னையில் இந்திய மாஸ்டர்ஸ் கோப்பை ஹாக்கி ஆடவர் இறுதியாட்டத்தில் தமிழ்நாடு இன்று மஹாராஷ்டிராவை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

திரௌபதி முர்மு

குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் வலுவான பங்களிப்பு நாட்டின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் தேவை என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

சர்வதேச குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் தினத்தையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் இந்நிறுவனங்கள் 30 சதவிகிதம் பங்காற்றுவதாக குறிப்பிட்டார்.

அடித்தட்டு பிரிவினரின் படைப்பாற்றல் திறன் மேம்பாட்டுடன் ஊரக வேலைவாய்ப்பையும் உறுதி செய்வதாக கூறினார்.

உள்ளடக்கிய வளர்ச்சி, நலிவடைந்த பிரிவினரின் ஆளுமைக்கும் இந்நிறுவனங்கள் பயனளிப்பதாக குறிப்பிட்டார்.

வேளாண்மைக்கு அடுத்தபடியாக நாட்டின் முதுகெலும்பாக திகழும் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை 2-வது பெரிய வேலைவாய்ப்பு உருவாக்கும் துறையாக உள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

ரஷ்யாவுடன் சுகோய் 30 உயர்ரக விமானங்கள் கொள்முதல் குறித்து மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் திரு. ஆன்ட்ரே பெலவ்சா உடன் சீன க்விங்டோவில் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பு பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தின் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில் எல்லை தாண்டிய தீவிரவாதம் புவி அரசியல் சூழல்கள் இந்திய ரஷ்ய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஆகியவை குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இந்த சந்திப்பின் போது பஹல்காம் திவிரவாத தாக்குதலுக்கு ரஷ்யா கண்டனம் தெரிவித்தது.

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கைகளின் பின்னணியில் இருதலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற இந்த பேச்சுவார்தகை முக்கியத்துவம் பெறுகிறது.

திரு.ராஜ்நாத் சிங் பெலாரஸ், தஜிகிஸ்தான், கஸகஸ்தான், சீன நாடுகளின் பாதுகாப்புத்துறை அமைச்சர்களுடனும் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

இப்பேச்சுவார்த்தைகள் பயனுள்ள வகையில் அமைந்ததாக திரு.ராஜ்நாத் சிங் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

1975-ம் ஆண்டின் அவசரகால பிரகடனம் நாட்டு மக்களின் மன உறுதியையும் சமூக உணர்வுகளையும் பாதித்தாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

50 ஆண்டு அவசரகால பிரகடன நிறைவு தினத்தை ஒட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், தேசத்தை விட குடும்பங்கள்

முக்கியமாகும் போது அவசரகால பிரகடனம் போன்ற நிலைமைகள் எழுவதாக குறிப்பிட்டார்.

அவசரகால பிரகடனம் நடைமுறையில் இருந்த 2 ஆண்டுகளில் 48 அவசர சட்டங்கள் பிறப்பிக்கப் பட்டதோடு 5 அரசியல் அமைப்பு சாசன திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖

சோமண்ணா

ரயில் கட்டணங்கள் மக்களை பாதிக்காத வகையில் படிப்படியாக உயர்த்தப்படும் என்று மத்திய ரயில்வே இணையமைச்சர் திரு.சோமண்ணா தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பரந்தூர் விமான நிலையபகுதியில் ரயில் நிலையம் அமைப்பதற்கான ஆலோசனை பரிசீலனையில் இருப்பதாக குறிப்பிட்டார்.

முன்னதாக சென்னை சென்ட்ரலிலிருந்து தனி ரயில் மூலம் காஞ்சிபுரம் புதிய ரயில் நிலையம் அமைச்சர் வந்தடைந்தடைந்தார்.

இந்திரா நகர் ரயில் தண்டவாளத்திற்கு இடையே சுரங்கப்பாதை அமைக்க வேண்டுமென்ற அப்பகுதி மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார்.

தொடர்ந்து ஏகாம்பரநாதர் மற்றும் காமாட்சியம்மன் திருக்கோவில்களில் சுவாமி தரிசனம் மேற்கொண்டார்.

ஸ்ரீபெரும்புதூர் விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் அவசரநிலை பிரகடனத்தின் 50-ம் ஆண்டு நிகழ்ச்சியில் அமைச்சர் இன்று பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

பொதுத்துறை வங்கிகளின் செயல்பாடு தொடர்பான ஆய்வுக்கூட்டம் மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

வைப்புநிதி, மேம்பாடு, கடன் வசூல், சைபர் பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்கள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சௌத்ரி மற்றும் வங்கி நிர்வாகிகள், முதன்மை அதிகாரிகள் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖

சர்க்கரை உற்பத்தி

நாட்டின் சர்க்கரை உற்பத்தி வரும் ஆண்டு 15 சதவிகிதம் கூடுதலாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்மூலம் 35 மில்லியன் டன் சர்க்கரை உற்பத்தியாகும் என்று கடன் மதிப்பீட்டு முகமையான **Credit Rating** அமைப்பின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

சராசரிக்கும் அதிகமான பருவமழையால் சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உள்நாட்டு தேவைகள் பூர்த்தியாவதோடு ஏற்றுமதியும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

பூரி ஜெகந்நாதர்

உலக பிரசித்தி பெற்ற பூரி ஜெகந்நாதர் கோவில் புனித ரத யாத்திரையை ஒட்டி லட்சக்கணக்கான பக்தர்கள் அங்கு குவிந்துள்ளனர்.

இவ்விழாவை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் இவ்விழா வளத்தையும், மகிழ்ச்சியையும், ஆரோக்கியத்தையும் தழைக்க செய்யட்டும் என வாழ்த்தியுள்ளனர்.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

இந்துசமய அறநிலையத்துறை சார்பில் சென்னை கீழ்பாக்கத்தில் செயல்படும் ஏகாம்பரநாதர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 14 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய கட்டடங்களை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.

கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் உணவருந்தும் கூடம் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

மாணாக்கருக்கு கல்வி உதவித்தொகை உபகரணங்கள், மிதிவண்டிகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

முன்னதாக சாகித்ய அகாடமி சார்பில் சென்னையில் இன்று நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய முதலமைச்சர், சாகித்ய அகாடமி விருதாளர்களுக்கு அரசின் சார்பில் அரசின் கனவு இல்ல திட்டத்தின்கீழ் வீடுகள் வழங்கப்படுவதாக கூறினார்.

❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி குறித்து மத்திய அமைச்சர் திரு.அமித்ஷாவும், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமியும் முடிவு செய்வர்கள் என்று பி.ஜே.பி. மாநில தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர் அஇஅதிமுக பா.ஜ.க கூட்டணியால் திமுகவிற்கு தேர்தல் பயம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

கோவி.செழியன்

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான கலந்தாய்வு வரும் 7-ம் தேதி தொடங்கும் என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி.செழியன் கூறியுள்ளார்.

சென்னையில் இன்று பொறியியல் பாடப்பிரிவிற்கான தரவரிசை பட்டியலை வெளியிட்டு செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், சிறப்பு பிரிவு மாணாக்கருக்கான கலந்தாய்வு வரும் 7-ம் தேதிமுதல் 11-ம் தேதிவரை நடைபெறும என்றார்.

.. வாய்ஸ் ..

துணை கலந்தாய்வு ஆகஸ்ட் 21-ம் தேதி முதல் 23-ம் தேதி நடைபெறும் என கூறினார்

மாணாக்கர் தங்களது தரவரிசை எண்ணை **tneaonline.org** இணையதள முகவரியில் தெரிந்துகொள்ளலாம்.

❖❖❖❖❖❖

மனோ தங்கராஜ்

தமிழ்நாட்டில் அனைத்து பால் உற்பத்தியாளர்களுக்கும் கால்நடைகள் வாங்க கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பால் கூட்டுறவு சங்கங்களை லாபத்தில் இயங்கக்கூடிய சங்கங்களாக மேம்படுத்துவதற்கான செயல்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இதன்படி லாபம் ஈட்டாத சங்கங்களை மேம்படுத்தும் பணிகளில் **MBA** பயின்ற மாணாக்கர் ஈடுபடுத்தப் படுவார்கள் என்றார்.

இம்மாணாக்கர் 3 மாத காலம் இச்சங்கங்களுடன் இணைந்து பயணிப்பார்கள் என்று கூறிய அவர், இந்த திட்டம் வெற்றியடைந்தால் தமிழகத்தின் அனைத்து சங்கங்களும் லாபத்துடன் இயங்கும் என்றார்.

இதன்மூலம் பால் மற்றும் பால் உற்பத்தி பொருட்களின் விற்பனை அதிகரிக்கும் என்று கூறியஅவர், விரைவில் கிராமப்புறங்களிலும் ஆவின் விற்பனையகங்கள் தொடங்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖

இருவரி

தமிழகத்தில் நடப்பாண்டு **MBBS, BDS** மருத்துவ படிப்புகளுக்கு விண்ணப்பிக்க நாளைமறுநாள் மாலை 5-மணிவரை காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

11-ம் வகுப்பு பொதுத்தேர்வு மாணாக்கருக்கான மறுமதிப்பீடு, மறுகூட்டல் தேர்வு முடிவுகள் வரும் 30-ம் தேதி வெளியிடப்படும் என அரசு தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

அரியலூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரியில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

மதுரை மாவட்டத்தில் வேளாண் விளை பொருட்கள் ஏற்றுமதிக்கான சான்றிதழ்களை பெற மானியம் வழங்கப்படுவதாக ஆட்சித்தலைவர் திரு.பிரவீன்குமார் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

மேட்டூர்

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் அதிகனமழை காரணமாக கர்நாடக அணைகளிலிருந்து 81 ஆயிரம் கனஅடி தண்ணீர் காவிரியில் திறந்துவிடப்பட்டுள்ளதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நண்பகல் நிலவரப்படி 57 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

டெல்டா பாசனத்திற்கு 22 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 114.33 அடியாகும்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 70 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டம் 135 அடியை எட்டியதால் நாளைமுதல் உபரிநீர் கேரளத்திற்கு திறந்துவிடப்படும் என்று தமிழ்நாடு நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து எமது தேனி செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

ஆட்சித்தலைவர்கள்

ஈரோடு மாவட்டத்தில் சுற்றுச்சூழல், மருத்துவம், கல்வி துறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று இன்று புதிதாக பொறுப்பேற்ற ஆட்சித்தலைவர் திரு.கந்தசாமி கூறியுள்ளார்.

.. வாய்ஸ் ..

நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவராக இன்று பொறுப்பேற்ற திருமதி. துர்கா மூர்த்தி அரசின் நலத்திட்டங்கள் மக்களை சென்றடைவது உறுதி செய்யப்படும் என்றார்.

❖❖❖❖❖❖

ஹாக்கி

சென்னையில் இந்திய மாஸ்டர்ஸ் கோப்பை ஹாக்கி ஆடவர் இறுதியாட்டத்தில் தமிழ்நாடு இன்று மஹாராஷ்டிராவை எதிர்கொள்கிறது. மகளிர் இறுதியாட்டத்தில் ஒடிஷா - பஞ்சாபுடன் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஹோவ்-வில் இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே 19 வயதிற்கு உட்பட்டோருக்கான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்குகிறது.

இரு அணிகளுக்கிடையே 5 ஒருநாள் போட்டிகளும், 2 டெஸ்ட் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖